செய்தி வெளியீடு எண்:666 நாள்:31.08.2021

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி</u>

கழகத்தின் ஓசூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ஒய்.பிரகாஷ் அவர்களின் மகன் கருணாசாகர், பெங்களூரு அருகே நிகழ்ந்த கோரமான சாலைவிபத்தில் சிக்கி உயிரிழந்தது அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

கோர விபத்துக்கு தன் அன்பு மகனைப் பறிகொடுத்திருக்கும் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஒய்.பிரகாஷ் அவர்களுக்கு எப்படி ஆறுதல் கூறுவது எனத் தெரியவில்லை.

அன்பு மகனை இழந்து தவிக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9